<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 169/2024</u>
<u>வழக்கு சாட்சி PW-10</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | மனோஜ் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | முருகன் | தொழில் | : | இல்லை |
| கிராமம் | : | பாம்புக்கோவில் சந்தை | வயது | : | 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 22nd, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் பாம்புக்கோவில் சந்தையில் குடியிருந்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி வள்ளியம்மாள் என்னுடைய பாட்டி. அ.சா.1 இராஜேஸ்வரி என்னுடைய சித்தி. எனது அம்மா சந்திரா எனது மாமா முனீஸ்வரனுக்கு கிட்னி தானமாக கொடுத்ததால் எனது பாட்டி வள்ளியம்மாள 35 சென்ட் இடத்தை எனது அம்மா பெயரிலும், சித்தி பெயரிலும் எழுதி வைத்தார். அதனால் எதிரி சிவக்குமார் எனது அம்மாவை அடிக்கடி திட்டி கொண்டிருந்தார். சுமார் 5 வருடங்களுக்கு முன்பு நான் ஊரில் இருந்தேன். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை. எதிரி சிவக்குமார் எனது சித்தி ராஜேஸ்வரியின் கையை வெட்டி விட்டதாக ஊரில் சொன்னார்கள். வழக்கு பற்றி வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 29.05.2018 ம் தேதி, மாலை 05.00 மணிக்கு நானும், எனது அக்காளும் எங்களது வீட்டின் முன்பு

பேசிக்கொண்டிருந்தோம் என்றால் சரியல்ல. எனது சித்தியும், பாட்டியும் மரக்காயர் வீட்டின் முன்பு பேசிக்கொண்டிருந்தபோது எதிரி சிவக்குமார் சித்தியையும், பாட்டியையும் பார்த்து அசிங்கமாக பேசினார் என்றால் சரியல்ல. எதிரி சிவக்குமார் எனது சித்தியை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து இடது கை, முழங்கை, வலது கை புஜம், வலது கழுத்து ஆகிய இடங்களில் வெட்டினார் என்றால் சரியல்ல. பின்னர் தடுக்க போன எனது பாட்டியின் இடுப்பிற்கு பின்னால் வெட்டி காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் எங்களைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>1 மற்றும் 2 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

நான் பாம்புக்கோவில் சந்தையில் காளியம்மன்கோவில் அருகே குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. சம்பவம் தொடர்பாக நான் கேள்விபட்டதாக சொல்லப்படும் சமயத்தில் பாம்புக்கோவில் சந்தையில் காளியம்மன்கோவில் அருகே தான் குடியிருந்து வந்தோம். எதிரி சிவக்குமார் எனது அம்மாவை ஏசியதாக கூறியது பொய் என்றால் சரியல்ல. எதிரி சிவக்குமார் எனது சித்தியை வெட்டியதை ஊர்க்காரர்கள் கூறி கேள்விபட்டதாக கூறியது பொய் என்றால் சரியல்ல.

**<u>3 மற்றும் 4 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.25 15:21:05 +0530

**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 169/2024**
**வழக்கு சாட்சி PW-11**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முருகன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சிவஞானம் | தொழில் | : | விவசாயம் |
| கிராமம் | : | பாம்புக்கோவில் சந்தை | வயது | : | 60 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 22nd, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் பாம்புக்கோவில் சந்தையில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். சாட்சி வள்ளியம்மாள் என்னுடைய அத்தை. அ.சா.1 இராஜேஸ்வரி என்னுடைய கொழுந்தியாள். சம்பவத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

இடப்பிரச்சனை சம்பந்தமாக அ.சா.1 க்கும், எதிரிகளுக்கும் முன்பகை இருந்து வந்தது என்றால் சரியல்ல. நான் போலீஸ் விசாரணையில் கடந்த 29.05.2018 ம் தேதி, எங்கள் ஊர் வாரச்சந்தைக்கு போய் விட்டு நானும், கருணாகரனும் மாலை 05.00 மணிக்கு எனது அத்தை வீட்டிற்கு வந்தோம் என்றால் சரியல்ல. அப்போது எனது அத்தையும், கொழுந்தியாளும் குழந்தையை வைத்துக்கொண்டு நின்று பேசிக்கொண்டிருந்தபோது எதிரி சிவக்குமார் அத்தையையும், கொழுந்தியாளையும் பார்த்து அசிங்கமாக

பேசினார் என்றால் சரியல்ல. எதிரி சிவக்குமார் எனது கொழுந்தியாளை கொலை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து இடது கை, முழங்கை, வலது கை புஜம், வலது கழுத்து ஆகிய இடங்களில் வெட்டினார் என்றால் சரியல்ல. பின்னர் தடுக்க போன எனது அத்தையின் இடுப்பிற்கு பின்னால் வெட்டி காயம் ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. எதிரிகள் அனைவரும் அவர்களைப் பார்த்து கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றால் சரியல்ல. நானும், கருணாகரனும் காயம்பட்ட இருவரையும் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம் என்றால் சரியல்ல. சம்பவத்தை நேரில் பார்த்ததாக போலீசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.01.25 15:21:14 +0530